# உடன்பிறப்பே... 65

**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த நாமக்கல் மு.பழனிவேலன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

*1986-ஆம் ஆண்டு நாமக்கல் பேரூராட்சி, நகராட்சி ஆனது. அதன் முதல் நகர மன்றத் தலைவராகப் பதவி ஏற்றவர் மு.பழனிவேலன். நாமக்கல் பேரூராட்சியின் கடைசித் தலைவரும் அவர்தான்.*

ஓவியம் : ரவி பேலட்



# ‘உன்னதத் தொண்டன்’ நாமக்கல் மு.பழனிவேலன்!

நாமக்கல் வட்டக் கழகச் செயலாளர் கோபால் என்கிற மு.பழனிவேலன், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரின் நம்பிக்கைக்குரிய தளகர்த்தர்.முத்தமிழறிஞர் கலைஞரால் முன்னிறுத்தப்பட்ட அன்பு உடன்பிறப்பு.

அண்ணா அறிவாலயம் கட்டப்பட்டபோது, தமிழ்நாட்டிலேயே அதிக நிதிவசூல் செய்து அளித்த நகரம் நாமக்கல்தான். நிதி வசூல் என்பதைவிட, கழகத்தின் பணியை மக்கள் அறிந்து கொள்வதற்கான அரசியல் களப்பணி என்று பேரறிஞர் அண்ணாவும், கலைஞரும் கூறுவர். அப்படியான களப்பணியில், கழகப் பணிகளில் உறுதிமிக்க உடன்பிறப்பாக நின்றவர் மு.பழனிவேலன்.

நீதிக்கட்சியைச் சார்ந்த நாமக்கல் பகுதியில் முதல் பார்ப்பனரல்லாத வழக்கறிஞராகப் பேரும் புகழும் பெற்று விளங்கிய முத்துசாமி அவர்களின் இரண்டாவது மகன்தான் பழனிவேலன். 1935-ஆம் ஆண்டு பிறந்தவர். சிறுவயதிலேயே கிடைத்த திராவிட இயக்கத் தொடர்புகள், தி.மு.கழகம் தொடங்கப்பட்டபோது அண்ணாவுடன் கை கோர்க்க வைத்தது.

சேலம் மாவட்டக் கழக மாநாடுகள், கட்சிக் கிளைகள் உருவாக்கம் என அனைத்து நிகழ்ச்சிகளிலும் முன்னணியில் நின்ற பழனிவேலன், தலைமைக் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர். குறிப்பாக, விலைவாசி உயர்வுப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம், கைலாசம் கமிஷன் அறிக்கை எதிர்ப்புப் போராட்டம், ஈழத்தமிழர் ஆதரவுப் போராட்டம் ஆகியவற்றில் கலந்துகொண்டு சிறை சென்றுள்ளார். நெருக்கடிநிலைக் காலத்தில் குறிவைத்து கைது செய்யப்பட்ட இவர், ஓராண்டு காலம் மிசா கைதியாக சேலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். முத்தரசநல்லூர் வெடிகுண்டு வழக்கில் இவர்மீது சம்பந்தமில்லாமல் பொய்வழக்கு போடப்பட்டு மூன்று மாதங்கள் திருச்சி சிறையில் இருந்தார்.

## நாமக்கல் அரசுக் கல்லூரிகள்

1967-ஆம் ஆண்டு, கழகம் ஆட்சி அமைத்த போது, நாமக்கல் நகரில் கல்லூரி அமைத்திட வேண்டும் என அண்ணா விருப்பம் தெரிவித்தார். அதற்கு இடம் தேர்வு செய்து, இரண்டு கல்லூரிகளுக்கு அனுமதி பெற்று அண்ணாவின் பெயரால் ஆண்கள் கல்லூரியும், கலைஞரின் பெயரால் மகளிர் கல்லூரியும் அமைத்து, நாமக்கல் நகர கல்வி வளர்ச்சிக்குப் பக்கபலமாக நின்றவர் பழனிவேலன்.

1968-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணாவின் கடைசி நாட்களின்போது, கழகத்தின் அறிவிப்பினை ஏற்று, நாமக்கல் வட்டத்தில் இருந்து அண்ணாவின் சிகிச்சைக்காக ரூபாய் 5,000 நிதி திரட்டி, கழகப் பொருளாளராக பொறுப்பு வகித்த கலைஞரிடம் சேர்த்த வட்டக் கழகச் செயலாளர் மு.பழனிவேலன் என ‘நம்நாடு’ செய்திக் குறிப்பு சொல்கிறது.

கழகத்திற்குச் சிலர் துரோகம் விளைவித்த போது, அந்தச் சோதனையான காலகட்டத்தில், கழகத்திற்கு அரணாக நின்று கலைஞர் கரத்தை வலுப்படுத்திய, பழனிவேலனை செல்லமாக ‘கோபால்’ என்று அழைப்பார் கலைஞர். அது அவரது மற்றொரு பெயர், அந்தப் பெயர் சொல்லி அழைக்கும் அளவுக்கு கலைஞரின் அன்புக்கு நெருக்கமாக இருந்தவர். அந்த அன்புதான் 1971-ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் ஆகும் வாய்ப்பினைக் கொண்டு வந்தது.

## தாகம் தீர்த்த தலைவர்

1963-ஆம் ஆண்டு பேரூராட்சித் தலைவராக இருந்தபோது, நாமக்கல் நகரின் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க முயற்சிகளைத் தொடங்கினார். தெருவுக்கு ஒரு பொதுக்குழாய் அமைத்து, அதற்குத் தீர்வு கண்டார். பின்னர் நாமக்கல் நகர மன்றத் தலைவராக 1986-ஆம் ஆண்டு பொறுப்புக்கு வந்தபோது, நகர வளர்ச்சிக்கு ஏற்ப நீண்டகால நோக்கில், நகரில் நான்கு இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை அமைத்து, குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கினார். அப்போதைய ஆட்சியில், அந்தத் திட்டங்களுக்கு அனுமதி வாங்குவது அவ்வளவு எளிதாக இல்லை. கடும் அலைச்சல்களுக்குப் பின்னரே அதை நிறைவேற்றினார். குறிப்பாக, மோகனூர் அருகே அமைக்கப்பட்ட நீரேற்று நிலையத்தில் அடிக்கடி பழுது ஏற்பட்டதால், அங்கு மின்சாரம் கொண்டு செல்வதற்கு என தனியாக 300 மின் கம்பங்களுடன் மின்சாரப் பாதையை உருவாக்கியது அவர் சாதனைகளில் ஒன்று. அது இன்றளவும் செயல்பாட்டில் உள்ளது.

1991-ஆம் ஆண்டு வரை அந்தப் பதவியில் இருந்த காலத்தில்தான் தந்தை பெரியார் பெயரில் நகராட்சி அலுவலகம், அறிஞர் அண்ணா பெயரில் பேருந்து நிலையம், ‘சேலம் பெரியார்’ எனப் போற்றப்பட்ட கழக முன்னோடி ஜி.பி.சோமசுந்தரம் பெயரில் ஒரு வணிக வளாகம், பெருந்தலைவர் காமராஜர் பெயரில் வணிக வளாகம் ஆகியவற்றை அமைத்து, மக்களின் ஏகோபித்த பாராட்டுகளைப் பெற்றார். அந்த வணிக வளாகங்கள் மூலம் நகராட்சியின் நிதிநிலைமையையும் சீர் செய்தார். அனைத்துக் கட்சி, அனைத்து சமூக மக்களையும் அன்போடு அரவணைத்துச் சென்ற நகராட்சித் தலைவராகத் திகழ்ந்தவர்.

கணேசபுரத்தில் உள்ள தந்தை பெரியார் தமிழ்ச் சங்கக் கட்டடம்தான் அவர் அலுவலகம். அந்தக் கட்டடம் கழகத்தின் பணிமனை அலுவலகமாக இயங்கும். பழனிவேலன் முறையாக ஓவியப் பயிற்சி பெற்றவர் என்பதால்,பொதுக்கூட்ட அறிவிப்புத் தட்டிகள் அவர் எழுத்துகளைச் சுமந்து நகரத்தின் தெருக்கம்பங்களில் அரசியல் பேசிக் கொண்டிருக்கும். ஒரே ஆளாக இரவு பகலாக எழுதிக் கொண்டிருப்பார். நகருக்குள் அவர் பயணம், பெரும்பாலும் சைக்கிள்தான். அதுவும் ஒருநாளைக்கு ஒரு ரூபாய் வாடகைக்கு எடுக்கப்பட்ட சைக்கிளில் வலம் வருவார்.

## பெரிய விருது! பெரியார் விருது!

கழகத்தில் இளம் தலைமுறையினரை வளர்த்த முன்னோடியாகத் திகழ்ந்தவர். ஒன்றிணைந்த சேலம் மாவட்டத்தில் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும், மு.பழனிவேலன் அவர்களும் கபில்தேவ்-கவாஸ்கர் போல இணைந்து விளையாடும் வீரர்கள் என கலைஞர் பாரட்டியதை நினைவுகூர்கின்றனர் நாமக்கல் கழகத்தினர்.

கழக முன்னோடிகள்மீது தலைவர் கலைஞர் எத்தகைய அன்பு வைத்திருப்பார் என்பதற்கு எடுத்துக்காட்டாக பழனிவேலன் இரண்டு முறை உடல்நலம் குன்றியிருந்தபோது நடந்த சம்பவத்தைச் சொல்லலாம். கலைஞர் சென்னையிலிருந்து தனி மருத்துவரை அனுப்பி வைத்து, சிறப்பாகக் கவனிக்கச் செய்ததும், இருமுறை நேரில் வந்து ஆறுதல் கூறியதும் பழனிவேலன் அன்பின் பக்கங்கள்.

மு.பழனிவேலனை ‘நாமக்கல் கலைஞர்’ என்கிறார்கள் கட்சியினர். அவரது தொண்டுக்குப் பெருமை சேர்க்கும் வகையில், 2003-ஆம் ஆண்டில் முப்பெரும் விழாவில் ‘பெரியார் விருது’ வழங்கி சிறப்பு செய்தார் முத்தமிழறிஞர் கலைஞர். உடல்நலக்குறைவால் தீவிரமான கழகப் பணிகளைக் குறைத்துக் கொண்டு பழனிவேலன், உழைக்கும் தொண்டர்களை ஊக்கப்படுத்தி வந்த நிலையில், 2021-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இயற்கை எய்தினார்.

**“மெழுகுவர்த்தி போல் ஒளியும் வழங்கி, உடலும் வதங்கிய நிலையில் இந்த இயக்கத்தை உயிர்மூச்சாகக் கருதி உழைக்கும் உன்னதத் தொண்டன் நாமக்கல் மு.பழனிவேலன்!”**

“மெழுகுவர்த்தி போல் ஒளியும் வழங்கி, உடலும் வதங்கிய நிலையில் இந்த இயக்கத்தை உயிர்மூச்சாகக் கருதி உழைக்கும் உன்னதத் தொண்டன் நாமக்கல் மு.பழனிவேலன்” - இந்த வைர வரிகள் தலைவர் கலைஞர் அவர்களின் வாசகம். தன்னையே மெழுகுவர்த்தி ஆக்கிக் கொண்டு கழகத்தையும் கழக உடன்பிறப்புக்களையும் காப்பாற்றிக் கரை சேர்த்த தலைவர் கலைஞர் அவர்கள் உழைக்கும் தொண்டர்களை இதயத்தில் வைத்திருப்பார் என்பதற்கு நாமக்கல் மு.பழனிவேலன் என்றென்றைக்கும் நிலைக்கும் கல்வெட்டு!

...துடிக்கும்

## மோடி, மணிப்பூர் செல்லட்டும்!

கடந்த பத்தாண்டுகளில் அதீதமாக வெளிப்பட்ட மோடியின் ஆணவம், இந்த ஆட்சிக் காலத்திலோ மங்கத் தொடங்கியிருக்கிறது. பெரும்பான்மை இல்லாமல் நிதிஷ்குமார், சந்திரபாபு நாயுடு ஆகிய இருவரின் தயவிலும் ஆட்சி நடத்தவேண்டிய சூழல், மோடியின் ஆணவத்தை உலுக்கியிருக்கிறது. இன்னொருபுறம், போர்க்குணத்துடன் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் செயற்பாடுகளும், மோடியைப் பலவீனமாக்கியிருக்கின்றன. கடந்த காலங்களிலும் இப்போதும் மோடியின் முகத்தையும் உடல்மொழியையும் கவனித்தாலே, இதைப் புரிந்துகொள்ள முடியும்.

‘விடாது கருப்பு’ என்பதைப் போல் கடந்த பத்தாண்டு ஆட்சிக் காலத்தின் தோல்விகளும் மோடி இழைத்தத் தவறுகளும் இந்த ஆட்சிக் காலத்திலும் அவரைத் தொடர்ந்து கேள்விக்குள்ளாக்கி வருகின்றன. குறிப்பாக, மணிப்பூர் வன்முறைச் சம்பவத்தைக் கட்டுப்படுத்தத் தவறியதும் மணிப்பூருக்கே செல்லாமல் மோடி தவிர்த்ததும், தொடர் கேள்விகளாக நீள்கின்றன. குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவித்து, பிரதமர் மோடி உரையாற்றியபோதும் எதிர்க்கட்சிகள் மணிப்பூர் பிரச்சினையை எழுப்பினர்.

சமீபத்தில், இஸ்ரோ தலைவர் சோம்நாத் “மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தின் மூலம் மோடியை விண்வெளிக்கு அனுப்ப முடிந்தால் பெருமை கொள்வோம்” என்று தெரிவித்திருந்தார். இதுகுறித்து, முன்னாள் மத்திய அமைச்சரும் காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்புச் செயலாளருமான ஜெய்ராம் ரமேஷ், “விண்வெளிக்குச் செல்வதற்கு முன்பு, பயாலஜிக்கலாக இல்லாத பிரதமர், முதலில் மணிப்பூர் செல்ல வேண்டும்” என்று தன் X பக்கத்தில் கிண்டலடித்திருக்கிறார்.

## :ப்ளாஷ்பேக்





கவிஞர் மோசே

### மனதில் பதிந்த கலைஞர் உரை!

1977-ஆம் ஆண்டு, நெல்லை மாவட்டத்திற்குத் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்க, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வருகை தந்திருந்தார். வள்ளியூர், திருவள்ளுவர் கலையரங்கில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு, என் தந்தை ராதாபுரம் டாக்டர்.மோகன் அவர்களுடன், 17 வயது இளைஞனாக நானும் சென்றிருந்தேன். தலைவர் கலைஞர் ஆற்றிய எழுச்சி உரை, என்னைக் கழகத்தை நோக்கி சுண்டி இழுத்தது. அப்போது, தரையில் அமர்ந்து கேட்ட அவரது உரை, இன்றும் அப்படியே மனதில் பதிந்துள்ளது.

**– கவிஞர் மோசே, துணை அமைப்பாளர், மாவட்டக் கழக இலக்கிய அணி,**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### நாளேடாக ‘நம்நாடு!’

1953-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 15-ஆம் தேதி கழகத்தின் நாளேடாக ‘நம்நாடு’ வெளியானது. அதற்கு முன் கழகத்தின் ஆதரவு நாளேடாக வெளிவந்த ‘மாலைமணி’ நின்றுவிட்டதால், ‘நம்நாடு’ ஏட்டைத் தொடங்குவதற்கு, பேரறிஞர் அண்ணா கடுமையாக உழைத்தார். கழகத்தின் சார்பில், போதுமான நிதி திரட்டப்பட்டு, அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு அறிவகத்தில் இருந்து ‘நம்நாடு’ வெளிவரத் தொடங்கியது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

530

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131